# அல்லாஹ்

அல்லாஹ் ஒருவன் இருக்கின்றான் என்று நாம் நம்புகின்றோமல்லவா? அந்த அல்லாஹ்தான் எங்கள் இறைவன். எங்களைப் படைத்தவனும், பாதுகாப்பவனும் அவனே. அவன் எங்களுக்கு உண்ண உணவும் குடிக்கப் பானமும் தருகின்றான். நாம் நோயுற்றால் எம்மைச் சுகப்படுத்துகின்றான். மேலும், நாம் உயிர்வாழ்வதற்குத் தேவையான எல்லா வசதிகளையும் ஏற்படுத்தித் தந்திருக்கின்றான்.



நாம் வாழும் இவ்வுலகையும், சூரியன், சந்திரன், கடல், மலை, ஆறு, காற்று, நெருப்பு, மிருகங்கள்,



S. S. P. C. 120284

பறவைகள் மற்றும் அனைத்து உயிரினங்களையும் பொருட்களையும் அவனே படைத்திருக்கிறான். எதையும் செய்யும் வல்லமை அவனுக்கு உண்டு.

அல்லாஹ் தனித்தவன். தாய் தந்தை இல்லாதவன். அவனுக்கு மனைவி மக்களோ உறவினரோ உதவியாளரோ இல்லை. அவனுக்கு எவருடைய உதவியும் தேவையுமில்லை. ஆனால், அவனுடைய உதவியும் அருளும் எல்லோருக்கும் தேவை. அவனுடைய அருள் இல்லாமல் ஒரு நிமிடமாவது நாம் உயிர்வாழ முடியாது. அல்லாஹ் அருளாளன்; அன்புடையவன். அவன் எம்மீது வைத்துள்ள அன்பின் காரணமாக எப்போதும் எமக்கு அருள் புரிந்து கொண்டிருக்கின்றான். இதற்காக நாம் அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் போது அவன் தனது அருட் கொடைகளை எமக்கு அதிகமாக்கு கின்றான்; எமது கஷ்டங்களைப் போக்குகின்றான். அனைவருக்கும் அருள்புரியும் ஆற்றல் மிக்கவன் அவனே. இவ்வாறு அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டுள்ள நாங்கள் அவனிடம் உதவி தேடுவோம்; அவன் அருளை நாடி அவனிடமே பிரார்த்தனை புரிவோம்.

**எல்லாச் சந்தர்ப்பத்திலும் அல்லாஹ்வை நினைப்போம்.**

## பயிற்சி

**சரியான கூற்றுக்களுக்கு " √ " அடையாளமிடுங்கள்.**

1. எங்கள் இறைவன் அல்லாஹ் ஆவான். ☐
2. அவன் தனித்தவன் ஆவான். ☐
3. அவன் எங்களைப் பாதுகாக்கின்றான். ☐
4. அவன் எல்லாவற்றையும் படைத்தவன் ஆவான். ☐
5. அவனுக்கு எமது வணக்கங்கள் தேவை. ☐
6. நாம் அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். ☐
7. நாம் அவனையே பிரார்த்திக்க வேண்டும். ☐